செ.வெ. எண். 871 நாள் 07.10.2010

# செய்தி குறிப்பு
## இலவச ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சென்னை பல்கலைக் கழகம் (USAB) மற்றும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) இணைந்து ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு இலவச ஆங்கில பயிற்சி சென்னையில் அளிக்கப்படவுள்ளது.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளங்கலை மற்றும் முதுகலை பட்டதாரிகள் (கலை, அறிவியல், வணிகவியல், சார்ந்தது) கல்லூரிக் கல்வி முடிந்தவுடன் நல்ல துறைகளில் வேலை கிடைப்பது அரிதாகவுள்ளது. இதற்கான முக்கிய காரணம் ஆங்கில பேச்சாற்றல் திறமை குறைவாக இருப்பதாலும், ஆங்கில மொழியில் பேச கூச்சப்படுவதும் ஆகும். இக்குறைபாட்டை களைய தாட்கோ சென்னை பல்கலைக் கழகம் (USAB) மற்றும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) பங்களிப்புடன் மிகப் பயனுள்ள பயிற்சியினை இலவசமாக வழங்கவுள்ளது.

இப்பயிற்சியில் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி, நடத்தை முறை மற்றும் அடிப்படை கணினி பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சிக்கு ஒழுங்காக வருகை புரிந்து பயிற்சி பெறுபவர்களுக்கு டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) சான்றிதழ் வழங்கப்படும். மேலும் இவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் TCS ல் பணிபுரிய வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

2010, 2009 மற்றும் 2008ஆம் கல்வி ஆண்டில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பட்டதாரிகள் இப்பயிற்சியில் சேரலாம். பயிற்சி பெற விரும்புவோர் 09.10.2010 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கீழ்கண்ட இடத்தில் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடம் : சென்னை பல்கலைக் கழகம்,
தந்தை பெரியார் கூடம்,
முதல்மாடி, நூற்றாண்டு கட்டிடம்,
தொல்காப்பியர் வளாகம் ( சேப்பாக்கம்)

இப்பயிற்சிக்கு மாணவர்கள் கொள்குறி (Objective) வகை தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்டவர்கள் சென்னை பல்கலை கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் TCS மூலம் பயிற்சி பெறலாம்.

இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திட ஆதிதிராவிட பழங்குடியின வேலையில்லா பட்டதாரிகள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்,
தாட்கோ, சென்னை-101

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை - 9